அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்.

॥ श्रीः ॥



கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள்.

புத்தகம், ௩. ] உ [ ஸஞ்சிகை, ௧.

ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

सर्वाभीष्टकरार्यधर्मकुटिलः कालः कलिर्बाधते
लोकास्तद्वशगाश्च केचिदधुना त्वां पीडयन्तीति च ।
माभूत्ते मनसि व्यथाऽवनकृते ते दीक्षिता पत्रिका
लोकाचार्यकृपाश्रया विजयते साह्यार्यधर्माभिधा ॥

ஸர்வாபீஷ்டகரார்யதர்மகுடில: கால: கலிர்பாததே
லோகாஸ்தத்வஶகாஶ்ச கேசிததுநா த்வாம் பீடயந்தீதி ச।
மாபூத்தே மநஸி வ்யதாऽவநக்ருதே தே தீக்ஷிதா பத்ரிகா
லோகாசார்யக்ருபாஶ்ரயா விஜயதே ஸாஹ்யார்யதர்மாபிதா॥

எவர் எதைவிரும்பினாலும் அவையனைத்தையும் அளிக்கும் சக்தி பொருந்திய மிகவும் பூஜ்யமான ஹே ஸநாதநதர்மமே மிகவும் வக்ரமான கலி என்கிற இக்காலமானது உன்னை ஹிம்ஸிக்கிறதென்றும் இக்காலத்தின் தீயநடத்தையைப் பின்பற்றும் சில ஜனங்களும் இப்பொழுது உன்னைக் கஷ்டப்படுத்துகிறார்கள் என்றும் உன் மனதில் வருத்தத்தை அடையாதே. லோககுருவான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாளுடைய கருணைக்குப் பாத்திரமாயும் எங்கும் பிரஸித்திவாய்ந்ததுமான ஆர்யதர்மம் என்கிற பத்திரிகையானது உன்னைப்பாதுகாக்கவேண்டி முயற்சியெடுத்துக்கொண்டு விளங்குகின்றது. ஆகையால் இனி உனக்குக் கவலை வேண்டாம்.

ஸகலப்பிராணிகளுடையவும்இன்றியமையாதசுகத்திற்கு முக்கியஸாதனமாய் விளகும் நம் ஸநாதந தர்மத்திற்குக்காலத்தின் கொடுமையாலும்கால தோஷதால் கலக்கமுற்ற சிலஜனங்களாலும் தற்காலம் ஏற்பட்டிருக்கும் வாட்டத்தைப்போக்கவேண்டி ஸ்ரீஜகத்குருபரமாசார்யாளுடையஅனுக்கிரஹபலத்தைப்பெற்றதாயும் ஸநாதனதர்மத்தை எங்கும் ஸ்தாபிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதுமான ஆரியதர்மம் என்கிற பத்திரிகையானது பிரசித்தமாய் எங்கும் பிரகாசிக்கிறபடியால் இனி நம் ஸநாதன தர்மம் யாதொருகுறைவுமின்றி எல்லோராலும் நன்கு ஆதரிக்கப்பட்டு எங்கும் கூடிய சீக்கிரம் அபிவிருத்தியடையுமென்று இதினால் அறிவிக்கப்படுகின்றது.

சுபம்!

உபபத்திராதிபர்.

2

# ஆர்ய தர்மம்.

பிரபவ-௵ தை-மீ கூஉ

## ஆர்யதர்மம் விஜயம்.

ஆர்யதர்மத்திற்கு இன்று 12-வயது பூர்த்தியாகி 13-வது வயது ஆரம்பிக்கின்றது. இது உற்பவித்து சில ஆண்டுகள் உற்பவித்த இடத்திலிருந்தே கிளம்பி தர்மநெறி நாடுவோரிடம் சஞ்சரித்துத்தனது இனிய மழலைச் சொற்களால் அன்னாருக்கானந்தத்தையளித்து, பின்னர் சில காலம் தக்ஷிண பாரத தர்மமண்டலத்தின் ஆதரவிற்கிடுபட்டு அங்கிருந்தே நாடெங்குமுலாவி மீண்டும் உற்பவித்த இடமாகிய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ பரமாசாரியாளுடைய பாதாரவிந்தத்தையே அடைந்ததானது உபநயனத்திற்காக ஒரு மாணவகன் ஆசாரியரை நாடிவந்ததுபோலிருந்தது பிறகு கர்ப்பாஷ்டம வயதுபோன்ற ஏழாவது ஆண்டில் உபனயனம் செய்விக்கப்பட்டு நாளதுவரை ப்ரம்மசரிய விரதத்தை அனுஷ்டித்ததுபோல் விளங்கி வந்தது. இதை லீலாவதியோடுசேர்த்து கிரஹஸ்த நிலைமைக்குக் கொண்டுவந்து ஸகல தர்மங்களை அனுஷ்டிக்கவும் அனுஷ்டிக்கும் முறையை அவரவர்களுக்குத் தக்கபடி யாவருக்கும் போதிக்கவும் பூர்ணாதிகாரம் பெற்று விளங்க வேண்டுமென்ற பரம கருணையால் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதாசார்யபாதாள் அவர்களால் அனுக்கிரகிக்கப்பட்டு இந்தப் பதிமூன்றாவது ஆண்டு முதல் லீலாவதீயென்னும் நாயிகைபோன்ற கணித சாஸ்திர நூலாகிய லீலாவதீயென்னும் கிரந்தத்துடனும் அதற்குத் தோழிகள்போன்ற ஸுலோசனீயென்னும் வியாக்கியானம் தமிழ்மொழிபெயற்பு இவைகளுடனும் சேர்ந்து ஸஞ்சரித்துஎல்லோருக்கும்அதிக சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டுமென்று நினைத்ததுபோல் இன்று முதல் விஜயமாகி வருகின்றது. கல்யாண அலங்காரத்தோடுவரும் வதூவரர்களைக் கண்டுகளித்து வரவேற்றி மரியாதை செய்து சிரேயஸ்ஸை அடைவதுபோல் நமது ஆரியதர்ம பத்திரிகா நேயர்களும்

தங்கள் பந்துக்களையும் ஸிநேகிதர்களையும் சேர்த்துக்கொண்டு
லீலாவதியோடு சேர்ந்துவரும் நமது ஆரிய தர்மத்தை ஆதரித்து
ஆர்யதர்மம் போதிக்கும் தர்மமார்க்கத்திலேயே ஸஞ்சரித்துஇஹ
பர சிரேயஸஸ்ஸுகளை அடைந்து சுகத்திலிருப்பார்களாக

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம் 13-வது ஆண்டு.

நம் பத்திரிகைக்கு இதுவரையில் 12 ஆண்டு பூர்த்தியாகி
இன்று 13-ம் ஆண்டு பிறந்திருக்கின்றது. இப்பத்திரிகையானது
12-வருஷகாலமாக கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோ
டி பீடாதிபதியவர்களுடைய பரிபூர்ணமான அனுக்கிரகபலத்
தால் அறிவிற்சிறந்த பல பேரியோர்களும் மனமகிழ்ச்சியுடன்
போற்றக்கூடிய மஹிமைபெற்று அறியபல விஷயங்களால் அலங்
கரிக்கப்பட்டதாய்க் கொண்டு குறிப்பிட்ட ஸமயம் தவறாமல்
பலவிடங்களிலும் சென்று சுருதி, ஸ்மிருதி, புராணம், சிஷ்டாசா
ரம் முதலிய பிரமாணங்களால் வெளியிடப்பட்ட பொதுவாயும்
விசேஷமாயுமுள்ள நம் ஸநாதன தர்மங்களையும் அவ்வக்காலங்க
ளில் அனுஷ்டிக்கவேண்டிய வைதிககர்மங்களுக்கு முக்கியமான
காலம் முதலியவைகளையும் வெளியிட்டிருக்கின்றது. பின்னும்
சாஸ்திரார்த்தங்களைச் சற்றும் கவனியாமல் புறக்கணித்துத் தா
மாகவே தம்மைகலியுகத்தில் தர்மோபதேசத்தின் பொருட்டுஅவ
தரித்த பரமாசார்யனாகக்கருதிக்கொண்டுதாறுமாறாய்த் தோன்றி
யபடியெல்லாம் சிலரால் செய்யப்படும் அதர்மோபதேசமாகிற
கொடிய விஷக்கொடியை வைகுண்டவாஸியான ஸ்ரீ நாராயண
னுடைய ஆணயாய் விளங்கும் மறையெனும் சிறந்த கோடறி
யால் வேறுடன் களைந்தெறிந்து சாதுக்களுக்கிருக்கும் துக்கத்
தைப் போக்கி உண்மையான ஸநாதனதர்மத்தைப் போதித்தும்
வந்திருக்கின்றது. அன்றியும் வடமொழியிலும் தென்மொழியி
லும் விசேஷ பாண்டித்யம்பெற்ற பற்பல பண்டித சிரோமணி
களால் ஆதரவுடன் அபிமானிக்கப்பட்டு வருவதால் எவ்வித அரு
மையான தர்மஸூக்ஷ்மங்களையும் சிரமமின்றி சகலரும் சுலபமா
யறிந்து அனுஷ்டிப்பதற்கு இதுவே முக்கியமான ஸாதனமாய்
பிரகாசிக்கின்றது என்பதை நம் சந்தாநேயர்களனைவரும் நன்க

ரிந்த விஷயமே. அதிகமான சக்திவாய்ந்த பல தேவாலயங்களாலும், புண்யதீர்த்தங்களாலும், புண்யக்ஷேத்ரங்களாலும், புண்ய விருக்ஷங்களாலும் மிகவும் மஹிமை பெற்ற மஹான்களாலும் நிறைந்திருப்பதைக் கொண்டுதான் நம் நாடு நன்னாடென்று போற்றப்படுகின்றது. இவ்விதம் எல்லோராலும் துதிக்கப்பெற்ற பெருமை பொருந்திய இன்னாட்டில் முற்பிறவியில் செய்த அறிய தவப்பயனால் மானிடப்பிறவியாகத் தோன்றிய மாந்தர்கள் மிருகங்களைப்போல் உண்பது, உடுப்பது, உறங்குவது முதலிய காரியங்கள் தான் இப்பிறவிக்குற்ற பயனெனக் கருதுவது அறிஞர்களுக்கழகில்லை பின்னே எப்பொழுதும் எண்ணவொண்ணாத கொடிய துன்பத்திற்குக் காரணமான பிறப்பிறப்பென்றும் பெயர்பூண்ட இப்பெரும்பிணியை அடியோடகற்றிச் சுகித்திருப்பதற்கு முக்கிய ஸாதனமாக விளங்குவது நம் ஸநாதன தர்மமே இதை அந்தந்த ஜாதி ஆச்ரமம் இவைகளுக்குற்றவாறு வேதவிதிவழுவாமல் தக்க மேற்கோளுடன் எளிய தமிழ்நடையில் போதிக்க முன்வந்திருப்பது நம் ஆர்யதர்மம் ஒன்றேயாகும். மற்றும் பல்வேறு பத்திரிகைகள் உலகிலுலாவினும் அவைகள் பெரும்பாலும் இம்மையிலடையவேண்டிய சுகத்திற்குச் சாதனமான ராஜீயம் முதலான விஷயங்களையே வெளியிடுகின்றனவென்பதும் பிரஸித்தமே! ஆகையால் நாம் பரலோகத்திலடையவேண்டிய சுகத்திற்கு முக்கிய ஸாதனமான ஸநாதநதர்மத்தைக் காலம் தவறாமல் வெளியிட்டு ஜனங்களுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணவேண்டிப் பிரகாசிக்கும் நம் பத்திரிகையை எல்லா ஜனங்களும் வாங்கிப்படித்து அதிற்கூறியவாறு தம்மாலியன்றவரையிலனுஷ்டித்து ஜன்மஸாபல்யத்தைப் பெறவேண்டியது அவசியமெனக் கருதியே இதன் சந்தாவும் வருஷம் 1-க்கு மூன்று ரூபாய் என்று குறைந்த சந்தாவாக ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் ஸகல சிரேயஸ்ஸுக்கும் முக்கியகாரணமாய் விளங்கும் ஆர்யதர்மத்தை நன்கறிந்து அனுஷ்டிக்கும்படி ஜநங்களுக்கும் நற்புத்தியைப் புகட்டவேண்டுமாய் ஸ்ரீ பரமேசுவரனை அநேக வந்தனபூர்வகமாகப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்.

உபபத்திராதிபர்.

# டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி கொண்டுவரப்போகிற
# விவாஹ வயது மசோதா கண்டனம்.

சென்னை சட்டஸபையில் டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி கொண்டுவரப்போவதாக வெளியிட்டிருக்கும் மசோதாவின் ஸாராம்சமாவது:—

விவாஹ தினத்தன்று பதினாறு வயது பூர்த்தியாயிராத பெண்ணுக்காவது 18-வயது பூர்த்தியாயிராத ஆண்பிள்ளைக்காவது எவரொருவர் விவாஹம் செய்துவைக்கிறரோ அல்லது அப்படிப்பட்ட விவாஹம் நடப்பதற்கு நேரே ஸம்பந்தப்பட்டு உடந்தையாயிருக்கிறரோ அவர்மீது கோர்ட்டில் குற்றம்சாட்டி ஆறு மாதம்வரையில் ஸாதாரணக்காவலோ அல்லது ஆயிரம் ரூபாய் வரையில் அபாரதமோ அல்லது இருவித தண்டனையும சேர்த்தோ விதித்து தண்டிக்கப்படும். அம்மாதிரியே வயது நிரம்பியிராத ஆண் பெண்பிள்ளைகளுக்கு விவாஹமாவதற்குச் சம்மதம் கொடுக்கிற யாதொரு கார்டியனும் மேற்கண்டவிதமே தண்டனைக்குள்ளாவார் என்பதேயாகும்.

எவ்விதம் யோசித்தாலும் இந்த மசோதா சட்டஸபையில் நுழைவதற்கு அற்பங்கூட அருகமில்லாதது என்று பலரும் கருதக்கூடியதே.

எவ்விதப்பயனைக்கருதி இந்த மசோதாவை டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி சட்டஸபைக்குக் கொண்டுவருவதாக உத்தேசிக்கிறள் என்று புலப்படவில்லை

1. தற்காலம் நடைபெறும் விவாஹங்கள் யாவும் மனு முதலிய மஹர்ஷிகளால் கூறப்பட்டிருக்கும் விதிக்கு முறணாக நடப்பதால் அது ஸரியல்ல அதை மாற்றி இவ்விதம் நடைபெறும்படி செய்தால் விதிப்படி ஸரியான விவாகமாயிருக்குமென்கிற அபிப்பிராயமா ?

2. அல்லது விதி எப்படி இருந்தாலும் அதை நாங்கள் கவனிக்கவில்லை. லோகக்ஷேமத்தையுத்தேசித்து இவ்விதம் நடத்த வேண்டுமென்று கருதுகின்றேம். இவ்விதம் நடத்துவதால் எற்படும் பயன்களாவன:—

1. பால்யவிதவைகளின் ஸங்கியை குறைவடையும்.

2. அதிபால்யத்தில் ஸ்திரீகள் ஒரு குழந்தைக்குத் தாயா ராகி மிகவும் துர்பலமாகவும் ரோகமுள்ள சரீரத்தை யுடையவளா கவும் ஆகிறார்கள் பால்யவிவாஹத்தை நிறுத்தினால் இந்த சிரம மும் நேராது.

3. பால்ய விவாஹத்தினால்பிறக்கும் குழந்தைகள் பலஹீன மாக இருக்கின்றன; இந்த விவாஹத்தால் அவ்விதமில்லாமல் பல முள்ள பிள்ளைகள் ஏற்படும்.

4. வரதக்ஷிணை சிரமமும் குறைவடையும் என்பவைகளே.

இங்கு கூறப்பட்டவைகளில் ஒன்றும் ஸரியான காரணமல்ல:—

சாஸ்திரவிதியை யனுஸரித்து இவ்விதம் நடத்தவேண்டு மென்று சொல்லிய முதலாவது காரணத்தை அற்பங்கூட அங்கீ கரிக்க நியாயமில்லை.

विवाहश्चाष्टवर्षीयाः कन्यायास्तु प्रशस्यते ।
दशवर्षा भवेत् कन्या अतऊर्ध्वं रजस्वला ॥
यस्तां विवाहयेत् कन्यां ब्राह्मणो मदमोहितः ।
असंभाष्योह्यपाङ्क्तेयस्सविप्रो वृषलीपतिः ॥

𑌵𑌿𑌵𑌾𑌹𑌶𑍍𑌚𑌾𑌷𑍍𑌟𑌵𑌰𑍍𑌷𑍀𑌯𑌾𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌕𑌨𑍍𑌯𑌾 𑌅𑌤𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾 ।
𑌯𑌸𑍍𑌤𑌾𑌂 𑌵𑌿𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑌦𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯𑍋𑌹𑍍𑌯𑌪𑌾𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌯𑌸𑍍𑌸𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌵𑍃𑌷𑌲𑍀𑌪𑌤𑌿𑌃 ।

ஸ்திரீகளுக்கு விவாஹத்திற்கு எட்டாவது வயதுதான் முக்கிய மான காலம், அந்தக் காலத்தில் செய்வதுதான் சாஸ்திரீயமான முக்கிய காலத்தில் செய்வதாகும். அதற்கு மேற்பட்டு प्रदानं प्रागृतोः என்று கௌதம மஹரிஷி கூறயவாறு. ருதுவாகிறதற்கு முன் செய்கிறது கௌணகால விவாஹமாகும். இக் கருத்தைத் தான் 10-வயதுவரையில் கன்னிகையாயிருக்கிறாள். அதற்கு மேற்பட்டால் ருதுகாலம் வந்துவிடுகிறது. அவ்விதம் ருதுவான பிறகு கேவலம் போகத்தை மாத்திரம் உத்தேசித்து மதமோஹித னாய் எந்தப் பிராமணன் ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்கிறானோ, அவன் சூத்திரஸ்திரீயின் பதியாக ஆகிறான். அவனுடன் சாஸ்

திரீய வியவகாரம் பங்க்திபோஜனம் முதலியவைகள் கூடாதென்று பலஸ்மிருதிவசனங்கள் ஸ்பஷ்டமாகத்தெரிவிக்கின்றன. இவர்கள் கூறுகிறபடி 14-வயது ஆனால் அக்காலத்தில் பெரும்பாலும் ருதுவான ஸ்திரீகளாகவே இருப்பார்களேயல்லாமல் ருதுவாகாமலிருப்பது அரிதேயாகும். அந்தமாதிரி நிலைமையிலிருப்பவர்களுக்கு சாஸ்திரீயமாக வைதிகமுறைப்படி விவாஹமே கூறப்படவில்லை. அவ்வித ஸ்திரீயை விவாஹம் செய்துகொண்ட பிராமணன் பிரஷ்டனென்றும் அவனுடன் சேரக்கூடாதென்றும் சாஸ்திரம் கூறுவதால் அவர்கள் கூறும் 14-வயதில்தான் ஸ்திரீகளுக்கு விவாஹமென்கிற வாதம் முற்றிலும் சாஸ்திரங்களுக்கு நேர்விரோதமென்பதை யாவரும் அறிந்தவிஷயமே.

இனி இரண்டாவது காரணத்தையும் விசாரிக்கிறோம்.

சாஸ்திரங்களை நாங்கள் கவனிக்கவில்லை. லோகக்ஷேமத்தை யுத்தேசித்து இவ்விதம் விவாஹம் செய்வதுதான் உசிதம் என்று அபிப்பிராயப்படுகிறோமென்று சொன்னாலும் அதுவும் சரியல்ல.

இந்துக்களின் விவாகத்தை அதிலும் திரைவர்ணிகர் என்று கூறப்பட்ட பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்கிற இம்மூன்று ஜாதிகளுடைய விவாஹத்தை எந்தமாதிரி கருதி டாக்டர் முத்துலெக்ஷ்மி இவ்விதம் கூறுகிறாள். வீட்டுக்கு வேண்டிய ஆடு மாடு குதிரை முதலான ஸாமான்கள் வாங்குவதுபோல் பெண்களையும் தோன்றியபடி சாஸ்திர நியமங்களைவிட்டுக் கெட்ட குலங்களிலும் விவாகத்திற்கு அருகமில்லாத வயதிலும் நம்மிஷ்டம்போல் ஒரு ஸ்திரீயை கிரகித்துக் கொள்ளலாமென்றுதான் உத்தேசித்திருப்பதாகத் தெரிகின்றது. இவ்விதம் நடக்கும் விவாகத்தால்தான் லோகக்ஷேமமுண்டாகுமாம். இவர்களால் எதிர்பார்க்கப்படும் லோகக்ஷேமம் அற்பங்கூட ஏற்படாதென்பதையும் பிறகு வெளியிடுகிறோம். இங்கு அவசியம் விசாரிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. அஃதாவது லோகத்திற்கு க்ஷேமத்தையுண்டு பண்ணவேண்டுமென்பதில் டாக்டர் முத்துலெக்ஷ்மிக்கு எவ்வளவு ஆதாவும் சக்தியும் இருக்கின்றதோ இவ்விதம் லோகக்ஷேமத்தைச்செய்யவேண்டுமென்றே அவதரித்துத் தம் தபோமஹிமையால்விசேஷசக்தி பெற்று விளங்கிவந்த மனு யாக்ஞவல்க்யர் பராசரர் முதலிய மஹரிஷிகளுக்கும் இருக்குமா இருக்காதா அவச்யமிருக்குமென்றே அங்கீகரிக்கவேண்டும். இந்த அபிப்பிராயத்தையே

சுருதியிலும் மனு எதைச்சொல்லியிருக்கிருரோ அது ஜனங்களுக்குச் சிறந்த ஔடதம் என்று கூறப்பட்டிருக்கின்றது. பின்னும்

यत्पूर्वं मनुना प्रोक्तं धर्मशास्त्रमनुत्तमम् ।
नहि तत्समतिक्रम्य वचनं हितमात्मनः ।

𑌯𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌨𑍁𑌨𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌨𑌹𑌿 𑌤𑌤𑍍𑌸𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌵𑌚𑌨𑌂 𑌹𑌿𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ।

மனுவால் மிகவும் சிறந்ததான யாதொரு தர்மசாஸ்திரமானது முன் சொல்லப்பட்டிருக்கின்றதோ அதை விட்டால் வேறுநமக்கு ஹிதத்தைச்செய்யும் வசனம் கிடையாதென்று ஸ்மிருதியிலும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வித மஹிமை வாய்ந்த மஹான்கள் ஜனங்களின் க்ஷேமத்தையுத்தேசித்துத் தம் சிறந்த ஞானத்தால் நன்கறிந்து விவாகமென்கிற ஒரு கர்மாவை இவ்விதம் செய்யவேண்டுமென்று அதற்குற்ற காலம் ஸ்திரீபுருஷர்களின் வயது முதலிய விஷயங்களை ஸ்மிருதி மூலமாக வெளியிட்டிருக்கும் பொழுது அதை நாங்கள் கவனிக்கமாட்டோம் அவர்கள் கூறியிருப்பது லோகக்ஷேமத்தின்பொருட்டாகாது. நாங்கள் ஞான திருஷ்டியால் கண்டுபிடித்துக் கூறுவதுதான் லோகக்ஷேமத்தின்பொருட்டாகுமென்று தோன்றியபடி விதிவிலக்கில்லாமல் ஒரு அதர்மத்தை உலகில் ஸ்தாபிக்க முன் வருவது எவ்வளவு ஸாஹஸமான காரியம். தர்மஸூக்ஷ்மத்தையறிந்து லோகக்ஷேமத்தையறிவிக்கும் விஷயத்தில் மஹான்களான மனு, யாக்ஞவல்கியர் முதலானமகரிஷிகளைக் காட்டிலும் எந்தவிஷயத்தில்இவர்கள்மேம்பட்டவர்களென்றுதெரியவில்லை. இவர்களுக்குக்கொடுக் கப்பட்டிருக்கும்கௌரவமான மெம்பர் ஸ்தானத்தை மஹான்களான மஹரிஷிகளின்கொள்கையைத் தள்ளிவிட்டு அதர்மத்தை நிலை நாட்டி நம் தேசத்திற்குக் கஷ்டத்தையுண்டு பண்ணுவதிலா உபயோகப்படுத்தவேணும். உலகிற்கு க்ஷேமத்தையுண்டுபண்ண வேண்டுமானல் இந்தமாதிரி மசோதாவையன்றி வேறென்றும் கிடையாதா. இதினல் இவர்கள் எதிர்பார்க்கும் பயனும் ஏற்பட நியாயமில்லை.

எதிர்பார்க்கும் பயனுவது.

1. பால்யவிதவைகளின் சங்கியை குறைவடையும்என்பது; இவர்களிஷ்டப்படி 14-வயது ஆனபிறகு விவாஹம் செய்து உட

னே அந்தப்பதி இறந்துவிட்டால் அவள் பால்ய விதவையாகாமல் விருத்த விதவையாக ஆய்விடுகிறுளா? அல்லது 14-வயதிற்கு மேல் விவாகம் நடக்கிற ஸ்திரீகளின் பதியை தீர்க்காயுளாக வைக்கிறேம் நாங்கள் தொடவில்லே என்று இயமனே அவன் தூதர்களோ. நமபிக்கைசெய்து கொடுத்திருக்கிறார்களா? ஒரு ஸ்திரீக்கு அவளுடைய முற்பிறவியிற் செய்த குரூமான பாபகர்மங்களுக்குப்பலமாக வைதவ்ய துக்கத்தைஅனுபவிக்கவேண்டுமென்று பகவானல் சிருஷ்டிகாலத்திலேற்படுத்தப்பட்டதை மறுபடியும் அந்த ஜன்மாவில் மாற்ற அவருக்கே அதிகாரமில்லாமலிருக்கும் பொழுது நமபோன்றவர்களால் அதை விலக்க எப்படி ஸாத்தியமாகும வார்த்தைகளால் மாத்திரம் லோகக்ஷேமம் என்று சொல்லிக்கொண்டு கொஞ்சங்கூட பலமில்லாமல் கவர்மெண்டாரவர்களேயும் மசோதாவைப் பாஸாகும்படி நிர்ப்பந்தித்து அதினல் ஆஸ்திகர்களனைவரையும் அதர்மானுஷ்டானத்தைச் செய்யும்படி வற்புறுத்திப் பல ஜனங்களால் நடத்தப்படும் இந்த அதர்மானுஷ்டானத்தால் நேரும் பாபங்களில் பாதி இவர்களுக்கும் எற்படுவதைத் தவிர வேறு விதமாக்ஷேமமென்கிற வார்த்தையைக் கூட இதினல் உச்சரிக்க நியாயமில்லே என்று சொல்லாமலே விளங்கும்.

2. அதிபால்யத்தில் ஸ்திரீகள் பிரஸவித்துத் தாயாராகி மிகவும் துர்பலமாகவும் ரோகத்துடன் கூடியவர்களாகவும் ஆகிறார்கள். இவ்விதம் விவாஹம் நடைபெற்றால் அந்த சிரமம் நேராமலிருக்கும் என்றும் சொல்லுகிறார்கள்.

இதுவும் சரியல்ல:—

தற்காலம் ஜகத்திலிருக்கும் கோடிக்கணக்கான ஸ்திரீகள் பால்ய விவாஹ முறையையே அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள் என்பது பிரஸித்தம். அவ்விதம் அனுஷ்டித்த ஸ்திரீகளில் 40, 50 60, 70, 80, வ்யது வரையிலுள்ள ஸ்திரீகள் பலர் நிறைந்த குடும்பங்களில் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் சென்று இவர்களால் கூறப்படும் துர்பலமும் ரோகமும் பால்ய விவாஹத்தால் உங்களுக்கேற்பட்டதுண்டா வென்று உண்மையை விசாரித்தால் ஒருவரும் இதினல் எற்பட்டதாக அங்கீகரிக்க மாட்டார்களென்பது நிண்ணம். இந்த அபிப்பிராயத்தையே சுமார் இரண்டு மாதத்திற்கு முன் வெளிவந்த மித்திரனில் சென்னேயில் நடைபெற்ற ஸ்திரீகளின் மீடிங்கில் வயது சென்ற ஒரு

ஸ்திரீ தனக்கு பால்யத்தில் விவாகமானதாயும் பால்ய வயதிலே யே குழந்தைகள் ஏற்பட்டதாயும் தன் குடும்பம் பெரிய குடும்ப மென்றும் இதுவரையில் பெண், பிள்ளை, பேரன், பேத்தி, முத லான எல்லோரும் யாதொரு சிரமமுமின்றி ஸௌக்கியமாய் இருக் கிறோம். ஆகையால் பால்ய விவாஹத்தால் ரோகம் முதலியவை கள் ஏற்படுமென்று நீங்கள் கூறும் காரணம் சரியல்லவென்று பப்ளிக்ஸபையில் சொல்லியிருப்பதாகபிரசுரிக்கப்பட்டிருக்கின்றது விசாரித்தல் இவ்விதமே இன்றும் பலஸ்திரீகளும் சொல்லத்தயா ராயிருப்பார்கள்.

இப்பொழுது சுமார் 20, 30, வருஷகாலமாக உலகில் ஸ்திரீ களுக்கு பலக்குறைவும் ரோகமும் அதிகமாக இருப்பதாகத்தெரி கின்றது, இதைக்கொண்டு இது பால்ய விவாஹத்தின் தோஷத் தாலேற்பட்டிருக்கின்றதென்று டாக்டர் முத்துலெக்ஷ்மியும்அவர் அபிப்பிராயத்தைப் பின்பற்றுகிறவர்களும் கருதலாம். இவ்விதம் நினைப்பது சரியல்ல. இங்கு கொஞ்சம் கவனிக்கவேண்டும். ஒரு காரியத்திற்கு ஒன்றைக் காரணமாகக் கூறினால் அந்தக் காரியத் தையுத்தேசித்து எப்பொழுதும் அது காரணமாகவே இருந்தே தீரும். ஒரு ஸமயம் அது காரணமாயிருந்தது. பின்னொருஸம யம் காரணமாகயில்லை என்றால் அதைக் காரணமாக நாம் கருதி யது தவறேயல்லாமல் உண்மையில் காரணமாயிருந்தால் ஒருக்கா லும் மாறாது. இருட்டு இல்லாமலிருக்கவேண்டுமானால் பிரகாசம் காரணம், தற்காலம் பிரகாசம் இருட்டைப் போக்கக் காரணமா யிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் அவ்விதம் இல்லையென்று அறிஞர் கூறமாட்டார். பால்ய விவாஹம் ஸ்திரீகளின்பலக்குறைவு ரோகம் முதலியவைகளுக்குக் காரணமாயிருப்பின் எப்பொ ழுதும் அது அந்த தோஷத்தையுண்டுபண்ணியே தீரும். பால்ய விவாஹம் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. சுமார் 30-வருஷங்களுக்கு முன் வரையில் இந்த பால்ய விவாஹமானது ஸ்திரீகளுக்கு பலக்குறைவையும் ரோகத் தையும் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதை அனுபவித்த ஸ்தி ரீகளும் இந்தக் காரணத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஜனங்க ளுக்குக் கஷ்டத்தையுண்டு பண்ணவேண்டியா இவ்விதம் நடத்தி னால் சிரேயஸ் உண்டாகுமென்று பொய்யான வார்த்தைகளைச் சொல்லி பால்ய விவாகத்தைச் சிறந்ததாக நினைத்து அதற்குற்ற

காலம் வயது முதலியவைகளைக் கருணாநிதிகளானமஹரிஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள். முன்பின் ஒன்றையும் கவனியாமல் தனக்குத்தோன்றியபடி எல்லாம் கார்யங்களை நடத்த வேண்டிப் போலியான சில காரணங்களைக்காட்டி கொடிய கஷ்டங்களுக்குக் காரணமாண அதர்மத்தை ஸ்தாபிக்க முன்வருவதுதானு லோக க்ஷேமமானகாரியம்.

3. தற்காலம் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருக்கும் பலக்குறைவிற்கும் ரோகத்திற்கும் காரணம். ஆஹாரத்தின் வித்யாஸமே முக்கிய காரணம். கொஞ்சகாலமாக நமக்குப் பழக்கமுள்ள ஆஹாரங்களை விட்டுவிட்டு நம் சரீரத்திற்குக் கெடுதலையுண்டுபண்ணக்கூடிய காபி முதலியவைகளை உபயோகப்படுத்துவதே அதிக ரோகத்திற்குக் காரணமாகின்றது. காபி ஸாப்பிடவில்லையென்று சொன்னால் ஜாதியிலிருந்தும் தம்மதத்திலிருந்தும் விலக்கிவிடுவார்கள்' தம்பெருமைக்கு மிகவும் சிறுமையை உண்டுபண்ணுமெனக்கருதி விற்பனைக்காகக் கொண்டுவரும் கண்ட பால்களைவாங்கித் தாமும் குடித்து 4, 6. மாதக்குழந்தைகளுக்கும் நிர்பந்தமாகப் போட்டு கிறார்கள். இதினால் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் பலக்குறைவும் வியாதியும் ஏற்படுகின்றது. மேலும் கர்ப்ப ஸமயங்களிலும் பிரஸவ சமயங்களிலும் பிரஸவித்த பிறகும் கிரமமாய் கொடுக்கவேண்டிய அனுபவத்தில் வந்திருக்கும் நம் நாட்டு ஔஷதங்களை உபயோகப்படுத்தாமல் கண்டபடி பலவித மருந்துகளை உபயோகப்படுத்துவதும் காரணமாகலாம். முதலாவது காரணமாகக் கூறப்பட்ட காபியில் பலவித கெடுதல் இருக்கென்றறிந்து அதை உபயோகப்படுத்திவந்த பல ஜனங்கள் அதை விலக்கிவிட்டு சுத்தமான பால் கஞ்சி முதலிய ஆஹாரங்களைத் தற்காலம் அருந்துகிறார்களென்பதும் பிரஸித்தமே. இவ்விதம் தோஷமுள்ள ஆஹாரத்தை ஸாப்பிடுவதால் ஜனங்களுக்கு அகாலமரணம் ஸம்பவிக்கிறதென்று

आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ।

ஆலஸ்யாதந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி ॥

அன்னத்தின் தோஷத்தால் என்று மனுவும் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். மேலும் ஸரியான ஆசாரமில்லாததும் தம் ஜாதிக்குற்ற தர்மானுஷ்டானமில்லாததும் காரணமாகலாம். இந்தக்கா

ணத்தையும் आचारस्यवर्जनात् ஆசாரஸ்யவர்ஜநாத் என்று மனுவும் சொல்லியிருக்கிறார். கொஞ்சகாலமாகத்தான் இந்தமாதிரி விபரீத ஆஹாரமும் ஆசாரக்குறைவும் ஸ்வதர்மானுஷ்டானக் குறைவும் ஏற்பட்டிருப்பதால் பல கஷ்டங்கள் நேருகின்றன. இவ்விதமே சரகஸம்ஹிதையில் விமானஸ்தானத்தில் ஜனபதத்வம்ஸ அத்யாயத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்தக் காரணங்களை விலக்கிச் சரியானபடி நமக்கேற்ற முறையில் நம்பெரியோர்கள் அனுஷ்டித்து வந்தபடி விதி தவறாமல் நடத்தி வந்தோமானால் ஸ்திரீகளுக்கோ புருஷர்களுக்கோ பலக்குறைவும் வியாதியும் அகாலமரணமும் ஏற்படாதென்பது திண்ணம்.

இதைவிட்டுக் காரணமில்லாததைக் காரணமாகக்காட்டி எவ்வளவு முயற்சித்தாலும் இவர்கள் எதிர்பார்க்கும் பயன் கிடைப்பது அரிதிலுமரிதே. இதனால் ஸ்திரீகளின் வியாதிமுதலியவைகளுக்குப் பால்ய விவாஹம் காரணமில்லை என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது,

4. பின்னும் தற்காலம் ஏற்படும் குழந்தைகள் பலமில்லாமலும் இளைத்தும் இருப்பதற்கும் இந்த பால்யவிவாஹமே காரணமென்றும் கூறுகிறார்கள்.

இதையும் விசாரிப்போம்:— இதற்குமுன் தாயாருடைய வியாதிக்குச்சொல்லப்பட்ட காரணங்களையே இதற்கும் எடுத்துக் கொள்ளலாம். கர்ப்பஸமயத்தில் சிசு, நன்கு விருத்தியாவதற்கு வேண்டிய ஆஹாரம் முதலியவைகளை ஸரியானபடி உபயோகப்படுத்தாமலிருப்பதும் பிறந்த பிறகும் தாயாரிடம் பால் சாப்பிடும்படியான பாக்கியம் பல குழந்தைகளுக்கில்லாமல் கடைகளிலிருந்தும் பலவிதமான ஆஹாரங்களையும் காபியையும் தோன்றியபடி நியமமில்லாமல் கொடுப்பதே அதன் வியாதிக்குக் காரணமாகின்றது. தாயாரிடம் ஆஹாரமிருந்து சிசுதானாக ஸாப்பிடுகிறதாயிருந்தால் தனக்கு வேண்டிய வரையில் ஸாப்பிடுமேயல்லாமல் அதிகமாக ஒரு பிந்துகூட அருந்தாது. அதனால் அந்தக் குழந்தைகளுக்கு ஆஹாரத்தால் தோஷமேற்பட நியாயமில்லாமலிருந்தது.

தொடரும்.

உபபத்திராதிபர்.

13

१

॥ श्रीगणेशाय नमः ॥

॥ श्रीरामो विजयते ॥

श्री भास्कराचार्य विरचिता

# ॥ ली ला व ती ॥

प्रीतिं भक्तजनस्य यो जनयते विघ्नं विनिघ्नन् स्मृतः
तं बृन्दारकबृन्दवन्दितपदं नत्वा मतङ्गाननम् ।
पाटीं सद्गणितस्य वच्मि चतुरप्रीतिप्रदां प्रस्फुटां
संक्षिप्ताक्षर कोमलामल पदैर्लालित्य लीलावतीम् ॥१॥

---

वेंकटरामशास्त्रिविरचिता लीलावतीव्याख्या
सुलोचनाऽऽख्या प्रारभ्यते ॥

श्रीमान् स्थावरजङ्गमात्मकजगत्त्राणाभियुक्तो हरिः
भूचन्द्रज्ञसितार्कभौमगुरुमन्दाभिख्यखेटैश्श्रितम् ।
सर्वं लोकगणं भगोळसमभिव्याप्तं च मध्ये स्थितः
पश्यामीति विचिन्तयन्निव दिनेशान्तर्गतः पातु नः ॥१॥

वेंकटेशमखिसुन्दरेश्वरश्रौतिवर्यगुरुनाथपादुकाः ।
संप्रणौमि सततं सहादरं सम्यगर्थगतिहेतवे चिरम् ॥२॥

क्वाहं मन्दो भास्कराचार्यगीः क्व व्याख्यानेस्या धृष्टतैतावती या ।
नायं दोषो मे यतोन्तःस्थिताभ्या माचार्याभ्यां प्रेर्यते ह्यन्तरात्मा ॥

व्यक्ताङ्ग्यचिरजातत्वाद्बालिकेयं सुलोचना ।
वरपाणिग्रहादूर्ध्वं प्रौढतामावहेच्चिरम् ॥ ॥४॥

अनुकूलो वरश्चास्या स्तुदुर्लभतमोऽद्यहि ।
मुद्रितांगीं ग्राहयामीत्येषाऽऽशा पूर्यतां बुधैः ॥ ॥५॥
लीलावत्या व्याख्यां गणेशदैवज्ञविज्ञवर्यकृताम् ।
स्वाख्यामविनिर्दिशता विद्वत्प्रवरेण केनापि ॥ ॥६॥
कर्पप्रदीपिकाख्या या व्याख्या व्यरचि ताश्च सु विचिन्त्य ।
लीलावतीं च बहुधा व्याकुर्वे तां गुरोः कृपया ॥ ॥७॥
स्वामिनाथः पिता यस्य माता नारायणी सती ।
तस्य वेंकटरामस्य कृतिर्व्याख्या जयत्वियम् ॥ ॥८॥

इहखलु निखिलगणकचक्रचूडामणिः श्रीमान् भास्कराचार्यः ग्रहगणिताद्युपयोगित्वेन पाटीमारभमाणः शिष्टाचारानुमितश्रुतिबोधितेष्टसाधनताकं समीहितकार्यसमाप्ति प्रतिबन्धकीभूतप्रत्यूह व्यूह विघाताय विरचितं मङ्गळं शिष्यशिक्षायै ग्रन्थतोऽपि निबध्नन् चिकीर्षितं प्रतिजानीते— प्रीतिमिति— यो गजाननः, स्मृतः = स्मृतिविषयीकृतः, भक्तजनेनेत्यर्थसिद्धम् । विघ्नं = प्रतिबन्धकदुरितात्मकं, विनिघ्नन् = समूलं विनाशयंश्चसन्, भक्तजनस्य = आदरनैरन्तर्यचिरकालाऽऽसेवितत्वविशेषणत्रयविशिष्टं यथाभवातितथा स्वमेव भजमानस्य जनस्य, प्रीतिं = कार्यपरिपूर्त्याऽतिशयितमानन्दं, अथवा— उचितकालानुष्ठितानभिसंहितफलक नित्यनैमित्तिककर्मबृन्दजनितदुरितानिवृत्ति चित्तशुद्धि वस्तुविवेकपरवैराग्यादिपरंपरयाऽखण्डापरोक्षसाक्षात्कारजनिताविद्यानिवृत्त्युपलक्षित निजपारमार्थिकस्वरूपानिरतिशयानन्दं जनयते अभिव्यञ्चयति स्वरूपभूतत्वादानन्दस्याजन्यतयाऽभिव्यक्तौ जनिरत्रोपचरितः । अत्र स्मृतः प्रीतिंजनयत इत्येनेनैवार्थात्स्मर्तृजनस्य स्मरण फलभाजः सामान्येन यस्यकस्यचित्प्रतीतावपि भक्तजनस्येतिविशेषिततया तादृशभक्तिमतएवार्चनवन्दनादिबाह्यव्यापारनिरपेक्षं स्मरणमात्रं विघ्ननिवारणानन्दप्रापणनिमित्तमिति द्योत्यते । शब्दाधिक्यस्यार्थाधिक्यनियतत्वौचित्यात् । तादृशभक्तिरहितानां तु अर्चनवन्दनादि बाह्यपरिकरो

पेतमसकृदावर्तितं च भवतिफलदमित्यपिद्योत्यते । “ आवृत्तिरसकृदुपदेशात् ” इतिन्यायात् । अतएव “ सकृत्प्रसङ्गादघमाशुहन्तितत् ” येनापि केन सकृदुच्चरितं स धन्यः ” इति भागवतशिवरहस्यादिवचनेषु साधनस्य सकृत्प्रसङ्गादेव फलप्रदत्वमुपवर्णितं पूर्वोक्त भक्तजनविषयतया योजनीयमितिसिद्धं भवति । अभक्तेषुशतशोभगवन्नामगृणत्स्वपिफलव्यभिचारदर्शनात् । यत्तु— क्वचित् तादृशभक्तिरहितेष्वपि सकृन्नामोच्चारणादिनापिफलप्रदिपादनं, तज्जन्मान्तरसिद्धभक्तिज्ञानयोगाधिकारिविषयं प्रत्येतव्यं, “ अनेकजन्मसंसिद्धस्ततोयातिपरां गति ” मिति गीतावचनात् “ विशेषानुग्रहश्चे ”ति सूत्राच्चेत्यन्यदेतत् । यएवं भूतः, तं मतङ्गाननं = गजवदनं, नत्वा पाटीं वच्मीत्यन्वयः । अत्र विघ्नहन्तुर्गजवदनत्वेनोल्लेखोऽर्थविशेषं द्योतयति— विरुद्धाकारतयाऽनुमेयवैलक्षण्येपि स्वस्मिन् निश्चितस्वरूपैक्यस्याविप्रतिपन्नानुभवसाक्षिकतया तद्वदेव विरुद्धाकारतयोपलक्ष्यमाणयोरपि जीवपरयोरविप्रतिपन्नौपनिषदाखण्डापरोक्षबलात्स्वरूपत ऐक्यमेव परमार्थतया विवेचनीयमिति । प्रतिपादितश्चायमर्थोऽद्वैत रसमञ्जरीकारैः— “ अद्वैतमेव परमार्थतया विवेक्तुमङ्गीकृतद्विपनराकृति सन्निवेशः ” इति । अत्रमतङ्गशब्दो “ गोभिश्श्रीणीतमत्सर ” मित्यत्र गोशब्दइवतज्जे उपचरित इति ध्येयम् । यदि देवैरपि स्वाभीष्टसिद्ध्यर्थं नमस्कृतो गजाननः, तदा किमुवक्तव्यं तस्य मनुष्योपास्यत्वमित्येतद्विवक्षया विशेषयति— बृन्दारकबृन्दवन्दितपदमिति— बृन्दारकाणां = ज्ञानैश्वर्यादिसंपन्नानामपिदेवानां, बृन्देन = समूहेन, वन्दिते पदे यस्य तम् । तथाचोक्तं— “ वागीशाद्यास्सुमनसस्सर्वार्थानामुपक्रमे । यं नत्वा कृतकृत्यास्स्युस्तं नमामि गजाननं ” इति । यद्वा बृन्दारकबृन्दवन्दितेन हिरण्यगर्भेण शतक्रतुनावा पद्यते ज्ञायत इति तम् । पूर्वस्मिन्नर्थे देवोपास्यत्वं, अत्र तुतद्ज्ञेयत्वमिति भेदः । भारत गणेशपुराणादिषु बहुत्रप्रपञ्चितोयमर्थस्ततएवानुसन्धेयः । तादृशं गजाननं नत्वा, नमस्कारो ध्यानादीनामप्युपलक्षणार्थः । तेन यावन्मनस्तोषमभ्यर्च्य नत्वा ध्यात्वा पाटीं = व्यक्तगणितं = प्रसिद्धैकादि परार्यपर्यन्ताष्टादशस्थानक व्यक्तांकसाध्यग-

णितम् । पाटीशब्दो व्यक्तगणितेरूढः । उत्तरत्र " पाटीसूत्रोपमं बीजं " " आस्तित्रैराशिकं पाटी " इत्यादिषु आचार्यैस्तथाप्रयुक्तत्वात् । अस्याः सिद्धान्तशिरोमणिघटकत्वार्थमाह– सद्गणितस्येति– सच्चतद्गणितञ्चेति विग्रहः । सत् = सत्प्रमाणकं = वेदमूलकमिति यावत् । एवंभूतं यत् गणितं = गणितस्कन्धरूपसिद्धान्तशिरोमण्याह्वयं तस्येत्यर्थः । ज्योतिषस्य वेदाङ्गतया तन्मूलकत्वं स्फुटम् । तस्यवेदाङ्गत्वञ्च " तत्रापरा, ऋग्वेदो यजुर्वेद स्सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दोज्योतिषमि " ति मुण्डकश्रुतौ प्रसिद्धम् । यद्यप्यत्र दशानामप्यपराविद्यात्वं श्रुतम् । नतु विशिष्य वेदानामङ्गित्वं शिक्षादेरङ्गत्वमिति भेदश्श्रुतः, तथापि आद्यानां चतुर्णां वेदशब्दशिरस्कत्वेन कथनादङ्गित्वं, शिक्षादीनां तथात्वाकथनादङ्गत्वं गम्यतइति–– " अंगानि वेदाश्चत्वारो मीमांसान्याय विस्तरः । पुराणं धर्मशास्त्रं च विद्याह्येताश्चतुर्दश " इत्यादिवचनादूह्यम् । सद्गणितस्येत्यवयवषष्ठीयम् । तथाच स्कन्धत्रयात्मक ज्योतिःशास्त्रैकदेशगणितस्कन्धरूप चतुर्लक्षण्यात्मक सिद्धान्तशिरोमण्याद्यावयवभूतामित्यर्थः। अतएवोक्तं गोळाध्याये— " द्विविधगणितमुक्तं व्यक्तमव्यक्तसंज्ञमि "ति। बीजगणितादपीयं प्रथमेति " पूर्वं प्रोक्तमव्यक्तबीजं " इति बीजोक्त्या-ज्ञायते । अमुमेवार्थ— इति श्रीभास्करीये सिद्धान्तशिरोमणौ लीलावतीसंज्ञः पाट्यध्यायस्समाप्तः" इत्येतदध्यायावसानगतवाक्यमपिविशदयति । अत्र च शिरोमणा विति सप्तम्या घटकत्वमर्थः । तथा च आद्यावयवत्वेन सिद्धान्तशिरोमणिघटकीभूतः पाट्यध्याय इति सिद्ध्यति । इतरव्यक्तगणितापेक्षयाऽस्यावैशिष्यं प्रकटयति— चतुरप्रीतिप्रदामिति— चतुराणां = अधीतव्याकरणादिं संस्कृतबुद्धिचातुर्यविशिष्टानां, प्रीतिप्रदां स्वार्थप्रकाशजनितां सद्यस्तनींपरां निर्वृतिं ददतीम् । अनेन व्याकरणाद्यधीतिनामेवात्र मुख्योधिकार इति सूचितम् । तदुक्तं गोळे— " यो वेद वेदवदनं सदनं हि सम्यग्ब्राह्मया स्सवेदमपि वेद किमन्यशास्त्रम् । यस्मा दतः प्रथममेतदधीत्य धीमान् शास्त्रान्तरस्य भवति श्रवणेऽधिकारी " ति । " द्विविधगणितमुक्तं व्यक्तमव्यक्तसंज्ञं तदवगमननिष्टश्शब्दशास्त्रे पटिष्टः।